தவிசாளர்
தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை.

1971 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(இ) பிரிவின்படி 1986 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமையின் கணக்குகள் மீதான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின்கீழ் 1986 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமையின் கணக்குகள் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதிச் சட்டத்தின் 13(7) (அ) பிரிவின்படி விபரமான அறிக்கை ஒன்று தவிசாளருக்கு 1987 ஓகத்து 27 ஆம் திகதியன்று அனுப்பி வைக்கப்பட்டது.

1.2. கணக்காய்வின் நோக்கெல்லை

இவ்வறிக்கையில் காணப்படும் கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வையும் கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிச் சோதனைகளையும் தழுவியனவாகும். அத்தகைய மீளாய்வினதும் சோதனைகளினதும் நோக்கெல்லையானது எனக்குக் கிடைக்கக் கூடியதாகவுள்ள மட்டுப்படுத்தப்பட்ட பதவியினர், வளம், நேரம் என்பனவற்றைப் பயன்படுத்தி முடியுமான அளவில் பரவலாக கணக்காய்வு செய்வதாகும். நிதிச் சட்டத்தின் 13ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் விரிவையும் தீர்மானிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்கியுள்ளன.

2. கணக்குகள்.

2.1. அபிப்பிராயம்.

இவ்வறிக்கையின் பின்வரும் பந்திகளில் காணப்படும் கருத்துரைகள் காரணமாக 1986 திசெம்பர் 31 ஆம் திகதியன்றுள்ளவாறான சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மீதான அபிப்பிராயத்தை வெளியிட நான் இயலாதுள்ளேன்.

| குறைபாடுகள் | இவ்வறிக்கையில் உள்ள பதிவுகளின் குறியீடு |
|---|---|
| (1) கணக்கீட்டுக் கொள்கை | 2:5:1 |
| (2) கணக்குகளில் தவறவிடப்பட்டமை | 2:5:2 |

| | |
|---|---|
| (3) ஏற்புடையதற்ற வெளிப்படுத்துகைகள் | 2:5:3 |
| (4) கணக்காய்வுக்கான சான்று | 2:5:4 |
| (5) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமை தீர்மானங்கள் என்பனவற்றுடன் அத்துடன் போகாதமை | 2:5:5 |
| (6) அடையாளம் காணப்பட்ட இழப்புகள் | 2:5:6 |
| (7) பணக் கோரிக்கைகள் | 2:5:7 |

## 2.2. நிதிப் பெறுபேறுகள்.

கணக்குகளின் பிரகாரம் கடந்த வருட வரவை மிஞ்சிய செலவினமான 1974832 ரூபாவுக்கு எதிராக 1986 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான முகாமையின் தொழிற்பாடு ரூபா 4538360 கொண்ட வரவை மிஞ்சிய செலவினமாக ஒப்பேறியுள்ளது.

பின்வரும் கணக்குக் கூற்று மீளாய்வுக்குரிய வருடத்தினதும் கடந்த வருடத்தினதும் நிதிப் பெறுபேறுகளின் பொழிப்பைத் தருகிறது.

31 திசெம்பருடன் முடிவுற்ற ஆண்டு

| | 1986 | | 1985 | |
|---|---|---|---|---|
| | ரூ | ரூ | ரூ | ரூ |
| வருமானம் | | | | |
| அரசாங்க உதவு தொகை | 8500000 | | 7125000 | |
| சில்லறை வருமானம் | 42123 | 8542,123 | 262932 | 7,387,938 |
| மீண்டுவரும் செலவினம் | | | | |
| நிர்வாகச் செலவு | 10,806,877 | 13080,483 | 7528089 | |
| தாபனச் செலவு | 2,273,606 | 13080,483 | 1834675 | 9362,764 |
| | | (4538,360) | | (1974,832) |

## 2.3. நிதி அமைப்பு

1985 திசெம்பர் 31 ஆம் திகதியன்றிருந்த ஒப்பீட்டுடன் 1986 திசெம்பர் 31 ஆம் திகதியன்றுள்ளவாறான முகாமையின் நிதி அமைப்பு பின்வருமாறாகும்.–

| | 31 டிசெம்பரில் உள்ளவாறு 1986 | 1985 |
|---|---|---|
| **வளங்கள்.** | | |
| அரசாங்க உதவு தொகை | 23,870,080 | 19,251,000 |
| வெளிநாட்டுதவி | 4,053,818 | 2,262,998 |
| | 27,923,898 | 21,513,998 |
| வரவும் செலவும் | ( 1,990,138) | 2,438,099 |
| கணக்கு மீதி | 25,933,760 | 23,952,097 |
| **பயனுக்கம்.** | | |
| எழுத்திலுள்ளபடி நிலையான சொத்துக்கள். | 26,053,334 | 22,992,768 |
| தேறிய நடப்புச் சொத்துக்கள். | (119,574) | 959,329 |
| | 25,933,760 | 23,952,097 |

## 2.4. நிதிகளின் மூலமும் பிரயோகமும்.

பின்வரும் கணக்குக் கூற்றானது மீளாய்வுக்குரிய வருடத்துக்கான முகாமையின் நிதிகளின் மூலத்தையும் பிரயோகத்தையும் காட்டுகிறது.

**நிதிகளின் மூலம்.**

| | ரூ | ரூ | ரூ |
|---|---|---|---|
| மூலதனச் செலவுக்கான அரசாங்க உதவுதொகை | | 4619080 | |
| வெளிநாட்டுதவி | | 1790820 | 6409,900 |
| **நிதிகளின் பிரயோகம்.** | | | |
| தேறிய பயிருக்குறை | 45,38,360 | | |
| கழி–நிலையான சொத்துக்களின் தேய்மானம் | 16,38,715 | | |
| கழி. கடந்த வருடம் | 28,99,645 | | |
| தொடர்பான சீராக்கம் | 110,123 | 27,89,522 | |
| நிலையான சொத்துக்கள் கொள்ளல் | | 46,99,280 | 7488,802 |
| தொழிற்படு முதலில் குறைவு. | | | (1078,902) |

தொழிற்படுதல் மீதான விளைவு

| | குறைவு | அதிகரிப்பு |
|---|---|---|
| சில்லறைக் கடனாளிகள் | - | 264,973 |
| வைப்புக்கள் | 350 | - |
| முற்பணங்கள் | 192,415 | - |
| பதவியினர் கடனாளிகள் | 19,159 | - |
| கையிருப்பு வங்கியிலுள்ள காசு | 1452,581 | - |
| கடன் கொடுப்போரும் திரண்ட செலவுகளும் | 101,054 | - |
| மீளச் செலுத்தப்படக்கூடிய வைப்புக்கள் | - | 421,684 |
| | 1765,559 | 686,657 |
| | | (1078,902) |

2.5. கணக்குகள் மீதான கருத்துரைகள்

2.5.1. கணக்கீட்டுக் கொள்கை

முகாமை வருடாந்த நிதிக் கூற்றறிக்கைகளில் அதன் கணக்கீட்டுக் கொள்கையை வெளிக்காட்டவில்லை. பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(1) அரசிறை தன்மை கொண்டதான முன்னைய வருடங்களில் உறப்பட்ட ரூபா 8,588,402 செலவினமானது மூலதனப்படுத்தப்பட்டுள்ளது. இதுபோன்று மூலதனத்தன்மை கொண்டதான செலவினம் அரசிறை செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. உ.க. மீன் இனப்பெருக்க குளங்களுக்கான செலவினம்.

(2) வெளிநாட்டுதவியையும் ஏனைய கொடையுதவியையும் வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. உ.க. ஐக்கிய தேசிய சூழல் கருத்திட்டத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற வெளிநாட்டுதவியையும் தலைமை அலுவலக வளவுக்குள் அமைந்துள்ள மீன் தடாகத்துக்கான கொடையுதவியும்.

2.5.2. கணக்குகளில் தவறவிடப்பட்டவை.

பின்வரும் விடயங்கள் கணக்கீடு செய்யப்படவில்லை.

| விடயம் | பெறுமானம் | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) "சமுத்திரமாறு" கலம் | கண்டறியப்படவில்லை | 1[illegible]35ஆம் ஆண்டில் கடற்றொழில் அமைச்சால் ஆராய்ச்சி வேலைக்கென முகாமைக்குக் கையளிக்கப்பட்ட "சமுத்திரமாறு" கலத்தின் பெறுமதி. |

(......5)

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முகாமையின் வசம் உள்ள அமைச்சுக்கு சேர்மதியான சொத்துக்கள். | கண்டறியப்படவில்லை | தற்போது முகாமை வசம் உள்ளதும் முன்பு கடற்றொழில் அமைச்சுக்குச் சேர்மதியாக இருந்தவையான அசைக்கக்கூடியதும், அசைக்க முடியாதவையுமான சொத்துக்கள் 1986 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க தேசிய நீரியல் வள ஆராய்ச்சி முகாமை சட்டத்தின் 35 ஆம் பிரிவிற்கமைய முகாமைக்கு உரித்தாக்கப்படவுமில்லை. கணக்குகளில் காட்டப்படவும் இல்லை. |
| (இ) | நகரப்படக்கூடியதும் பதிவேட்டுப்பொருட்களும் | கண்டறியப்படவில்லை | 1986 திசெம்பர் 31 ஆம் திகதியன்றிருந்தவாறான முகாமையின் களஞ்சியத்தில் இருந்தவையான நகரக்கூடியதும் பதிவேட்டுப்பொருட்களும் ஆகிய இரண்டினதும் பெறுமதி கணக்கிட்டு கணக்கீடு செய்யப்படவில்லை. |
| (ஈ) | மின் கட்டணங்கள் | 77,198 | மீளாய்வுக்குரிய வருடத்துக்கான கணக்குகளில் இலங்கை கடற்றொழில் பயிற்சி நிறுவகத்தின் மின் உண்டியல்கள் தொடர்பாக முகாமையால் கொடுப்பனவு செய்யப்பட்ட இத்தொகை தொடர்பான கணக்குகளில் சீராக்கம் செய்யப்படவில்லை |
| (2) | கடற்றொழில் அமைச்சிலிருந்து சாட்டப்பட்ட அலுவலர்கள். | 21,521 | கடற்றொழில் அமைச்சால் முகாமைக்குச் சாட்டப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களினது படிகளான ரூபா 21,521 கணக்குகளில் காட்டப்படவில்லை. |

25.8. ஏற்புடையதற்ற வெளிப்படுத்துகைகள்.

ஏற்புடையதற்ற பின்வரும் வெளிப்படுத்துகைகள் கணக்குகளில் அவதானிக்கப்பட்டன.-

| | | | |
|---|---|---|---|
| (அ) | ஏனையவை | 9,430 | பத்திரக் கோப்புப் பேழை, உருக்கு சிற்றலமாரி என்பன தொடர்பாக உறப்பட்ட இச்செலவு அலுவலக சாதனமாக காட்டப்படவில்லை. |
| (ஆ) | ஏனையவை | 34,853 | கட்டிடங்களைப் பேணுவது தொடர்பாக உறப்பட்ட இச்செலவு ஏனைய நிலையான சொத்துக்கள் என ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ளது. |
| (இ) | ஏனையவை | 16,254 | ஆராய்ச்சிக் கலத்துக்கு வழங்கப்பட்ட டீசல் எண்ணெய் தொடர்பாக உறப்பட்ட இச்செலவு ஏனைய சொத்துக்கள் என ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ளது. |
| (ஈ) | வாகன உத்தரவுப் பத்திர கட்டணம் | 5,300 | 1987 ஆம் ஆண்டுக்கான உத்தரவுப் பத்திரக் கட்டணமாக 198[illegible] ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட இத்தொகை 1986 ஆம் ஆண்டுக்கான செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |

2.5.4. கணக்காய்வுக்கான சான்று

ஒவ்வொரு விடயத்துக்கும் எதிரே காட்டப்பட்ட சான்று போதமானதாக இல்லாததால் கணக்காய்வில் கணக்கிலுள்ள பின்வரும் விடயங்கள் திருப்திகரமாக உறுதிப்படுத்தப்படவோ ஏற்றுக்கொள்ளப்படவோ முடியவில்லை.

| கணக்குகள் | | பெறுமதி | கிடைக்கப்பெறச் செய்யாத சான்று |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் | 29,664,828 | (1) நிலையான சொத்துக்கள் அட்டவணை<br>(2) வருடமுடிவின்போது அல்லது வருடத்தின்போது சொத்துக்கள் உருப்படி சரிபார்க்கப்பட்டதைக் காட்டும் சான்று. |
| (ஆ) | சில்லறைக் கடனாளிகள் | 300,277 | தனிப்பட்ட கடனாளிகள் கணக்குகளும் சம்பந்தப்பட்ட கட்சியினரிடமிருந்து பெற்ற உறுதிப்பாடுகளும். |

(...7)

| | | | |
|---|---|---|---|
| (இ) | முகாமையால் இடப்பட்ட வைப்புக்கள் | 321,144 | தனிப்பட்ட வைப்புக் கணக்குகளும் சம்பந்தப்பட்ட கட்சியினரிடமிருந்து பெற்ற உறுதிப்பாடுகளும். |
| (ஈ) | கடன் கொடுத்தோரும் திரண்ட செலவுகளும் | 614,203 | தனிப்படக் கடன்கொடுத்தோர் திரண்ட செலவுகள் கணக்குகளும் சம்பந்தப்பட்ட கட்சியினரிடமிருந்து பெற்ற உறுதிப்பாடுகளும். |
| (உ) | முகாமையில் வைப்புக்கள் | 11,34,668 | " |

2.5.5. <u>சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள், முகாமை தீர்மானங்கள் என்பனவற்றுடன் இணைந்து போகாதமை.</u>

சட்டங்கள், விதிகள் முதலியனவற்றுடன் இணைந்து போகாத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அவையாவன.—

| சட்டத்துக்குரிய குறிப்பு | தேவைப்பாடு | இணைந்துபோகாதமை பற்றிய விபரம். |
|---|---|---|
| (அ) 1971 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(5)(ஈ) பிரிவு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் உடன்பாட்டுடன் முறைந்த பட்ட உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சியை முகாமை தீர்த்தல் | உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஆ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(6) பிரிவு | கணக்காய்வாளர் அதிபதியால் வேண்டியவாறு அவர் குறித்துரைத்த விதத்தில் கணக்குகள் மீதான ஏதாவது அறிக்கைகளுடன் அடுத்துவரும் வருடத்தின் ஏப்பிரல் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கணக்குகள் கணக்காய்வுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். | 1986 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் கணக்காய்வுக்காக 1981 ஜூன் 9ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது. இருப்புக்கள், களஞ்சியங்கள் பற்றிய தேவைப்படுத்தப்பட்ட அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (இ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(1) பிரிவு | நிதியாண்டு முடிவுற்று 4 மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு ஆண்டறிக்கை வரைவின் பிரதிகள் அனுப்பி வைத்திருத்தல் வேண்டும். | 1987 ஜூன் 9 ஆம் திகதி தன்னிலும் 1986 ஆம் ஆண்டுக்கான வரைவு அறிக்கையின் பிரதி ஒன்று சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவு | நிதியாண்டு முடிவுற்று 10 மாதங்கள் முடிய முன்னதாக முகாமையின் ஆண்டறிக்கை அதன் இறுதி வடிவத்தில் சமர்ப்பிக்கப் படல் வேண்டும். | முகாமை 1981 ஆம் ஆண்டில் ஆரம்பித்ததிலிருந்து ஆண்டறிக்கைகள் பாராளு மன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (உ) தேசிய நீரியல்வள முகாமையில் நிதி நடவடிக்கை முறைகள். | நிதியாண்டு முடிவுற முன்பு வருடாந்த பொருள் சரிபார்த்தல் செய்யப்படவேண்டும். | 1986 ஆம் ஆண்டுக்கு இது செய்யப்படவில்லை. |
| (ஊ) தேசிய நீரியல்வள முகாமையின் நிதி நடவடிக்கை முறைகள். | சம்பளங்களும் முற்பணங்களும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியின் உரிய திகதியிலிருந்து 3 ஆம் நாள் கோரப்படாதிருக்கும் சம்பளங்கள் முற்பணங்கள் என்பன பதிவேடுக்கு மாற்றப்பட்டு வங்கியிலிடப்படல் வேண்டும். | சில சந்தர்ப்பங்களில் மீளாய்வுக்குரிய வருடத்தில் பெற்றுக்கொள்ளப்படாத சம்பளங்களும் முற்பணங்களும் 10 நாட்களுக்கு மேலாக காசாளர் வசம் வைத்திருக்கப் பட்டுள்ளது. |
| (எ) 396(ஈ) நிதி ஒழுங்கு விதிகள். | 6 மாதங்களுக்கு மேலாக நிலுவையாகவுள்ள காசோலைகளின் பெறுமதி சரிசெய்யப் படவேண்டும். அல்லது அரசிறைக்கு வரவு வைக்கப்படல் வேண்டும். | 10,538 ரூபாவுக்கான காசோலைகளை இவ்வாறு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

2.5.6. அடையாளம் காணப்பட்ட நட்டங்கள்.

1986 திசெம்பர் 31 ஆம் திகதியன்றிருந்தவாறான நடைமுறைச் சொத்துக்களின் கீழ் பணியாட்கள் கடனாளிகள் எனக் காட்டப்பட்ட ரூபா 274,158 , முகாமையின் சேவையிலிருந்து விலகிய 6 ஊழியரிடமிருந்து அறவிடற்படற்பாலதான 13,127 ரூபா கொண்ட சில்லறைப் பணக் கட்டை உள்ளடக்கியதும் ஆகும். 1987 ஒக்டோபரில் உள்ளவாறு இதிலிருந்து அறவிடவேண்டிய தொகை ரூபா 8,832 ஆகும். அறவிடக்கூடிய சாத்தியம் அற்றதான இத்தொகை தொடர்பாக கணக்குகளில் ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை.

2.5.7. பணக் கோரிக்கைகள்.

பொருட்களையும் சேவைகளையும் வழங்குவதற்காக 3 வருடங்களுக்கு முன்பு வழங்குநர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 126,859 முற்பணங்கள் 1986 திசெம்பர் 31 வரை தன்னிலும் தீர்க்கப்படவில்லை. இம் முற்பணங்கள் தற்போது அறவிடப்படுகிறது. 1987 ஒக்டோபர் மாதத்திலுள்ளவாறு 61,190 ரூபா அறவிடவேண்டியுள்ளது.

3. நிதி, செயற்பாடு பற்றிய மீள் நோக்கு.

3.1. நிதிப் பெறுபேறுகள்

கணக்குகளின் பிரகாரம் 1986 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டின் முகாமையில் செயற்பாடு, முன் உளைய வருடத்துக்கான 1974832 ரூபா தேறிய பற்றுக்குறையுடன் ஒப்பிடுகையில், ரூபா 4538,360 தேறிய செயற்பாட்டுப் பற்றுக்குறையுடன் ஒப்பேறியுள்ளது. இவ்வருடத்துக்கான பற்றுக் குறை அதிகரிப்பானது, கடந்த வருடத்தைக் காட்டிலும் நிருவாக நாப்பைச் செலவுகள் முகாமையின் முயற்சிகள் விரிவடைந்ததையடுத்து ரூபா 3717719 ஆல் அதிகரித்துள்ளது.

## 3.2. வரவு செலவுக் கட்டுப்பாடு

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(7) (அ) பிரிவிற்கமைய முகாமைக்கு அனுப்பிவைக்கப்பட்டதான எனது விபரமான அறிக்கையில் மீளாய்வுக்குரிய வருடம் தொடர்பான ஒதுக்கப்பட்டதுக்கும் உள்ளவாறுள செலவுகளுக்கும் இடையேயான வேறுபாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதில் குறிப்பிடப்பட்ட முக்கியமான வேறுபாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | செலவினவிடயம் | வரவுசெலவு ஒதுக்கீடு | உள்ளவாறானது | வேறுபாடு |
|---|---|---|---|---|
| 1. | சம்பளங்களும் படிகளும் | 4090,000 | 5103,237 | 25% |
| 2. | மேலதிகநேரவேலை | 160,000 | 284,071 | 78% |
| 3. | எரிபொருள் | 600,000 | 858,185 | 43% |
| 4. | வாகனங்களையும் சாதனங்களையும் பேணல் | 800,000 | 1805,508 | 126% |
| 5. | தொலைபேசி | 60,000 | 122,918 | 103% |
| 6. | சில்லறைச் செலவு | 225,000 | 758,406 | 237% |
| 7. | எழுதுகருவிவகைகள் | 160,000 | 329,673 | 106% |
| 8. | விளம்பரம் | 50,000 | 63,628 | 27% |
| 9. | பாதுகாப்பு சாதனம் | 25,000 | 49,800 | 100% |

மேலே குறிப்பிடப்பட்ட விபரங்களின் நிமித்தம் மீளாய்வுக்குரிய வருடத்தில் வரவு செலவுக் கட்டுப்பாடு கடைப்பிடிக்கப்பட்டதை கணக்காய்வில் திருப்திப்பட முடியாதுள்ளது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்.

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் கட்டுப்பாடுகள் என்பனவின் குறைபாடுகள் எனது விபர அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. பின்வரும் துறைகளில் விசேட கவனம் செலுத்தப்படவேண்டியுள்ளது.

(...10)

(அ) காசு

(ஆ) சில்லறைக் காசுக் கொடுப்பனவுக்கான பதவியாக்காசு, முற்பணங்கள்.

(இ) கொள்வனவு

(ஈ) நிலையான சொத்துக்கள்

(உ) வெளிநாட்டுதவி, உதவிக் கொடைகள் கணக்கீடு

(ஊ) வரவு செலவுக் கட்டுப்பாடு

கணக்காய்வாளர் அதிபதி.

## தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை.

### 1986 திசெம்பர் 31 ஆம் திகதியன்றிருந்தவாறான ஐந்தொகை

| 1985 | | 1986 |
|---|---|---|
| | **அரசாங்க உதவுதொகை** | |
| 34,402,438.29 | கடந்தவருட ஐந்தொகைப்படி மு/கொ மீதி | 47,423,998.65 |
| 11,195,000.00 | 1986ல் கிடைக்கப்பெற்ற உதவிக்கொடைகள் | 13,119,080.00 |
| 1,826,560.36 | 1986ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டுதவி | 1,790,820.15 |
| 47,423,998.65 | மொத்த உதவி தொகை | 62,333,898.80 |
| 14,525,184.77 | கடந்த வருட ஐந்தொகைப்படி மீண்டுவரும் செலவு | 23,887,949.08 |
| 9,362,764.31 | வருடத்துக்கான மீண்டுவரும் செலவு | 13,080,483.98 |
| 23,887,949.08 | மீண்டுவரும் செலவு மொத்தம் | 36,968,433.06 |
| | **ஈடுபடுத்தப்பட்ட உதவுதொகை** | |
| 20,030,369.82 | கடந்தவருட ஐந்தொகைப்படி மு/கொ மீதி | 23,952,097.98 |
| 4,070,000.00 | வருடத்துக்கான உதவிக்கொடைகள் | 4,619,080.00 |
| 1,826,560.36 | வருடத்துக்கான வெளிநாட்டுதவி | 1,790,820.15 |
| 25,926,930.18 | | 30,361,998.13 |
| (1,974,832.20) | வரவை மிஞ்சிய செலவு | (4,428,237.20) |
| 23,952,097.98 | | 25,933,760.93 |

## உதவுதொகையை ஈடுபடுத்தல்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | **நிலையான சொத்துக்கள்** | | | | |
| 10,303,092.59 | 1,372,411.07 | 8,930,681.52 | | கட்டிடங்கள் | 10,925,363.15 | 2,402,720.32 | 8,522,642.83 | |
| 1,320,722.13 | 192,572.07 | 1,128,150.06 | | இயந்திரங்கள் | 1,640,280.74 | 324,644.28 | 1,315,636.46 | |
| 3,334,348.19 | 171,056.47 | 3,163,291.72 | | சாதனங்கள் | 4,628,474.26 | 504,491.28 | 4,123,982.98 | |
| 376,966.00 | 58,982.07 | 318,063.93 | | தளபாடங்கள் | 481,445.50 | 96,598.67 | 384,846.83 | |
| 398,154.23 | 40,526.60 | 357,627.63 | | நூலகப் புத்தகங்களும் சஞ்சிகைகளும் | 433,802.23 | 80,342.02 | 353,460.21 | |
| 653,863.79 | 137,311.23 | 516,551.86 | | வாகனங்கள் | 2,217,257.34 | 202,697.53 | 2,014,559.81 | |
| 715,630.73 | - | 715,630.73 | | பல்லினம் | 715,630.73 | - | 715,630.73 | |
| - | - | - | | ஏனையவை | 759,802.50 | - | 750,802.50 | |
| 1,019,506.38 | - | 1,019,506.38 | | பிரயாணம் | 1,019,506.38 | - | 1,019,506.38 | |
| 906,761.57 | - | 906,761.57 | | எரிபொருள் | 906,761.57 | - | 906,761.57 | |
| 2,920,065.99 | - | 2,920,065.99 | | கட்டுடிச்சாமான்களும் நுகர்பொருளும் | 2,920,065.99 | - | 2,920,065.99 | |
| 3,016,437.40 | - | 3,016,437.40 | | சம்பளங்களும் படிகளும் | 3,016,437.40 | | 3,016,437.40 | |
| 24,965,548.30 | 1,972,779.51 | 22,992,768.79 | 24,965,548.30 | | 29,664,827.79 | 3,611,494.10 | 26,053,333.69 | 29,664,827.7 |
| | | | | **நடப்புச் சொத்துக்கள்** | | | | |
| 133,708.43 | | | | சில்லறைக் கடனாளிகள் (அட்.1) | 398,681.43 | | | |
| 142,015.00 | | | | வைப்புக்கள் (அட் 2) | 141,665.00 | | | |
| 513,558.29 | | | | முற்பணங்கள் ( அட் 3) | 321,143.99 | | | |
| 293,317.33 | | | | பணியாளர் கடனாளிகள் (அட்4) | 274,158.25 | | | |
| 1,946,230.84 | 3,028,829.89 | | | வங்கியும் காசும் - | 493,649.10 | 1,629,297.77 | | |
| | | | | **நடப்புப் பொறுப்புக்கள்** | | | | |
| 513,148.19 | | | | கடன்கொடுத்தோரும் திரண்ட செலவுகளும் | 614,202.82 | | | |
| 1,556,352.51 | | | | வைப்புக்கள் (அட்8) | 1,134,667.71 | | | |
| 1,972,779.51 | 4,042,280.21 | | (1,013,450.32) | | 3,611,494.10 | 5,360,364.63 | | (3,731,066.8[illegible]) |
| | | | 23,952,097.98 | | | | | 25,933,760.9[illegible] |

ஒப்பம். கலா. கிரான் டபி. ஜயவர்தன
தவிசாளர்.

ஒப்பம். கலா. ஜி.சி.ஸன் ஜயசூரிய
பணிப்பாளர் நாயகம்

தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை
1986 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான வரவு செலவுக் கணக்கு

| 1985 | 1985 | | 1986 | 1986 |
|---|---|---|---|---|
| | 7,125,000.00 | அரசாங்க உதவுதொகை | | 8,500,000.00 |
| | 262,932.11 | சில்லறை வருமானம் | | 42,123.40 |
| | 7,387,932.11 | | | 8,542,123.40 |
| | | மீண்டுவரும் செலவினம் | | |
| | | நிருவாகச் செலவு | | |
| 3,003,128.25 | | சம்பளம் | 2,635,959.22 | |
| 1,255,972.49 | | படிகள் | 1,467,276.51 | |
| 322,579.30 | | ஊழியர் சேமலாப நிதி | 353,438.93 | |
| 21210,801.92 | | மேலதிகவேலை ஊதியம் | 284,070.83 | |
| 179,683.07 | | பிரயாணம் | 550,927.98 | |
| 346,594.98 | | பாதுகாப்புச் சேவைகள் | 307,497.89 | |
| 44,778.50 | | கட்டணங்கள் | 33,549.00 | |
| 418,076.35 | | எரிபொருள் | 858,185.11 | |
| 75,459.43 | | விளம்பரம் | 63,628.00 | |
| 190,306.81 | | எழுதுகருவி வகைகள் | 329,673.43 | |
| 26,680.60 | | தபால்செலவு | 46,818.25 | |
| 104,265.50 | | உபசாரம் | 128,733.62 | |
| 32,586.50 | | சேமநலம் | 33,828.20 | |
| 160,203.79 | | தொலைபேசி | 122,918.25 | |
| 61,172.93 | | வெளிநாட்டுப் பயணம் | 10,045.80 | |
| 237,856.56 | | சில்லறை | 758,406.28 | |
| 845,342.81 | | வாகனங்கள் முதலியனவற்றைப் பேணல் | 1,805,508.49 | |
| 2,599.50 | | சீருடைகள் | 391.90 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10,000.00 | | | கணக்காய்வாளர் | 15,000.00 | | |
| - | 7,528,089.39 | | அறவிடமுடியாத கடன்கள் | 1,020.00 | 10,806,877.69 | |
| | | | தாபனச் செலவுகள் | | | |
| 507,831.89 | | | மின்சாரம் | 538,755.81 | | |
| 34,465.95 | | | காஸ் | 46,235.89 | | |
| 2,996.00 | | | பாதுகாப்புச் சாதனங்கள் | 49,900.00 | | |
| 1,289,381.08 | 1,834,674.92 | 9,362,764.31 | தேய்மான ஏற்பாடுகள் | 1,638,714.59 | 2,273,606.29 | 13,080,483.98 |
| | | (1,974,832.20) | வரவை மிஞ்சிய செலவுகள் | | | (4,538,360.58) |
| | | - | கடந்த வருடத்துக்கான சீராக்கம் | | | 110,123.38 |
| | | (1,974,832.20) | | | | (4,428,237.20) |

ஒப்பம் கலா. திரான் டபி. ஜயவர்தன
தவிசாளர்

ஒப்பம் கலா. ஐ.சி.என் ஜயசூரிய
பணிப்பாளர் நாயகம்

1987 மே 29 ஆம் திகதி.